**கொலொன்ன பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 13 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கொலொன்ன பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 10,080 கூட்டுத்தொகையான 18 நூலகப் புத்தகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்படுத்தாமல் ரூபா 150,492 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் நிலையான சொத்தாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் ரூபா 11,000 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு பேரேட்டுக் கணக்குகளில் காணப்பட்ட வழுக்கள் மீளாய்வாண்டின் போது சீராக்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டில் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 147,300 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) ரூபா 24,500 கூட்டுத்தொகையான நானாவித வைப்புக்களின் கொடுப்பனவு மூலதனச் சொத்துக்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தலின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட தவறைத் திருத்தும் போது திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறைக் கணக்கில் பதியப்பட்டமையின் காரணமாக திரண்ட நிதியம் ரூபா 24,500 இனால் குறைத்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) ரூபா 96,630 கூட்டுத்தொகையான நிர்மாண வைப்புக்களின் கொடுப்பனவுகள் மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்ட தவறைத் திருத்தும் போது திரண்ட நிதியம் மற்றும் பற்றாக்குறைக் கணக்கில் பதியப்பட்டதன் காரணமாக திரண்ட நிதியம் ரூபா 96,630 தொகையான குறைவை வெளிப்படுத்தியது.

(எ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முற்பண மீதி ரூபா 261,354 இனாலும் 05 வைப்புக் கணக்குகளின் மீதி கூட்டுமொத்தமாக ரூபா 1,219,198 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (அ) நிதிப் பிரமாணம் 371 | 1998 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 83,310 கூட்டுத்தொகையான 02 முற்பணங்கள் 2017 யூலை வரையிலும் தீர்க்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) நிதிப்பிரமாணம் 571 | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருட காலத்தை விஞ்சியிருந்த ரூபா 387,260 கூட்டுத்தொகையான 64 காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக 2017 யூலை வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,237,150 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,838,482 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 10,601,332 தொகையான குறைவொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 10,601,332 இனால் குறைவடைந்தமை தொடர்பில் 02 வருமான விடயங்களில் ரூபா 10,362,217 குறைவும், 03 செலவின விடயங்களில் ரூபா 1,247,759 அதிகரிப்பும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | பாதீடு செய்யப்பட்ட வருமானம் | உள்ள படியான வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 857 | 887 | 342 |
| வாடகை | 5,736 | 3,605 | 5 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 647 | 936 | - |
| ஏனைய வருமானம் | 29,379 | 19,807 | 8,695 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் ஏனைய வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவைவிட முறையே 45 சதவீதத்தாலும் 16 சதவீதத்தாலும் அதிகரித்திருந்ததுடன் வாடகை வருமானம், பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் மற்றும் அரசாங்க பங்களிப்பின் கீழ் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவைவிட முறையே 37 சதவீதம், 36 சதவீதம் மற்றும் 45 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 2.3.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வியாபாரங்களின் கீழ் கொண்டுவரப்பட்ட 05 நிறுவனங்கள் மீளாய்வாண்டிற்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய 1945 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் பொலித்தீன்களால் அல்லது புடவைகளால் பூர்த்தி செய்யப்பட்ட விளம்பர அறிவித்தல்களுக்காக கட்டணம் அறவிடல் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த எந்தவொரு விளம்பர அறிவித்தல்களிலிருந்தும் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் யூன் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதியில் எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்திலிருந்து பெறவேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணமான ரூபா 1,145,910 தொகை 2017 யூலை வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஏப்ரல் முதல் திசெம்பர் வரையிலான காலப்பகுதிக்கும் 2016 ஆம் ஆண்டிற்கும் எம்பிலிப்பிட்டிய காணிப் பதிவாளர் அலுவலபத்திலிருந்து பெறவேண்டிய முத்திரைக் கட்டணமான ரூபா 4,982,959 தொகை 2017 யூலை வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2016 இன் வருடாந்த பாதீட்டில் மீளாய்வாண்டின் போது அமுல்படுத்தவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வேலைகள் இனங்காணப்படாதிருந்ததுடன் பிரதேச சபை நிதியத்தின் கீழ் ரூபா 1,000,000 தொகையும், மாகாண சபை மற்றும் ஏனைய நிதியங்களின் கீழ் ரூபா 6,000,000 தொகையுமாக ரூபா 7,000,000 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பிரதேச சபை நிதியத்தின் கீழ் 08 வேலைகளுக்காக ரூபா 3,912,398 தொகையும் மாகாண சபை நிதியத்தின் கீழ் 56 வேலைகளுக்காக ரூபா 54,089,279 தொகையுமாக மொத்தமாக ரூபா 58,001,677 செலவிடப்பட்டிருந்தது.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் அபிவிருத்தியடைந்த கிராமங்களைப் பெயரிடல் மற்றும் அதற்குரிய நடவடிக்கைகளைச் செய்வதற்காக 2014 ஆகஸ்ட் 26 ஆந் திகதி சபை தீர்மானமொன்றை எடுத்திருந்ததுடன் 2016 அகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் அபிவிருத்தியடைந்த கிராமங்கள் பெயரிடப்படாதிருந்ததுடன் அந்த பணிகள் 02 வருட காலத்தினால் தாமதமடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நூலகங்களில் சிறுவர் பிரிவொன்றை ஏற்படுத்துதல் மற்றும் நூலகங்களுக்காக கணனிப் பிரிவொன்றை ஏற்படுத்துதல் என்பவற்றிற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

**3.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

2017 யூலை வரையில் பழுதுபார்த்தல் அல்லது அகற்றக்கூடிய நிலையில் காணப்பட்ட ரூபா 6,136,550 கூட்டுத்தொகையான இயந்திரங்கள் மற்றும் 05 வாகனங்கள் என்பன 07 மாதங்கள் முதல் 08 வருடங்கள் வரையிலான காலமாக பழுதுபார்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

**3.4 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

---

சபையினால் சேகரிக்கப்படுகின்ற உக்காத கழிவுகளை வேறுபடுத்தி முறையான பிரகாரம் அகற்றப்படும் வரை வெளி நிறுவனத்திற்குச் சொந்தமான பழைய கட்டிடமொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. 2017 யூலை வரையிலும் அக்கட்டிடம் உக்காத கழிவுகளினால் நிறைந்திருந்ததுடன் அக்கழிவுப் பொருட்களை உரிய பிரகாரம் அகற்றுவதற்கான திட்டமுறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் பாதீட்டில் 90 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட செய்யப்பட்ட கூட்டுத்தொகையான ரூபா 42,690,300 மொத்த நிதிஏற்பாடும் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 09 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 886,920 கூட்டுத்தொகையான மொத்த நிதிஏற்பாட்டில் 85 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிப்புக் காணப்பட்டது.

**4.2 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வினை மேற்கொள்வதற்கான விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு வேலை கையளித்தல் மேற்கொண்டு உள்ளகக் கணக்காய்வு அலகு தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பிரிவு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

| **முறைமைகள்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டமை |
| | (ii) | பேரேட்டுக் கணக்குகளும் பட்டோலையும் இணங்காமை. |

| | | |
|---|---|---|
| | (iii) | வருமானம் குறைத்துப் பதியப்பட்டமை |
| | (iv) | சொத்துக்கள் குறைத்துப் பதியப்பட்டமை |
| (ஆ) வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை. |
| (இ) சொத்துக் கட்டுப்பாடு | | விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் காணப்பட்டமை. |
| (ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு | | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டமை |
| (உ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | முறையான வகையில் அகற்றப்படாமை |